செ.வெ.எண்:14/ ஆகஸ்ட் /2020 நாள்: 07.08.2020

**திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

----------------

இன்று(07.08.2020) திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக சிகிச்சை பெற்று வந்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்த 25 நபர்கள், கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 1 நபர், அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த 2 நபர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 1 நபர், பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த 2 நபர்கள் ஆக மொத்தம் 31 நபர்கள் பூரண குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

காஜாமலையில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தனிமைப்படுத்தப்பட்ட COVID-Care மருத்துவ முகாமில் சிகிச்சை பெற்று வந்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த 22 நபர்கள், பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த 1 நபர் ஆக மொத்தம் 23 நபர்கள் பூரண குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேற்கண்ட அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 31 நபர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவமுகாமில் சிகிச்சை பெற்று வந்த 23 நபர்கள் ஆக மொத்தம் 54 நபர்கள் பூரண குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தேவையில்லாமல் வெளியில் நடமாடுவதை பொது மக்கள் தவிர்க்க வேண்டும். **விழித்திரு - விலகி இரு - வீட்டில் இரு** என்பதை கடைபிடிக்க வேண்டும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை கொரோனா வைரஸ் நோய் இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

**வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**